සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

තෙවන වාර පරීක්ෂණය
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026**
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | විෂයය / பாடம் / Subject: **இஸ்லாம்** | පත්‍රය / வினாத்தாள் / Paper: I | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

அறிவுறுத்தல்:

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. பின்வருவோரில் ஆன்மீகத்துறையில் பிரபல்யம் பெற்றவராக அடையாளப்படுத்தப்படுபவர் யார்?

(1) இப்ராஹீம் இப்னு அத்ஹம் (றஹ்) (2) முஹம்மத் இப்னு இஸ்மாஈல் (றஹ்)
(3) நுஃமான் பின் ஸாபித் (றஹ்) (4) உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்)
(5) உஸ்மான் இப்னு மல்ஊன் (ரழி)

(……..)

02. ரமழானில் நோன்பு நோற்றவர், நோற்காதவர் அனைவரும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயமான ஓர் அமல்

(1) பெருநாள் தொழுகை (2) ஸதகதுல் ஜாரியா (3) உழ்ஹிய்யா
(4) ஸகாத்துல் பித்ர் (5) தவ்பா

(……..)

03. “பெரும் பாவம் செய்தவன் ஈமானை இழக்கின்றான். ஆனாலும் அவன் காபிரல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான்” எனும் கருத்தையுடைய அகீதா பிரிவினர் யார்?

(1) கவாரிஜ்கள் (2) முஃதஸிலாக்கள் (3) பாதினியாக்கள்
(4) காதியானிகள் (5) முர்ஜியாக்கள்

(……..)

04. “அல்-கியாதா” என்ற பதம் சுட்டி நிற்பது

(1) பொருளாதார நீதி (2) கூட்டுப் பொறுப்பு (3) ஆடை அணியும் முறை
(4) சமூக நீதி (5) தலைமைத்துவம்

(……..)

05. “அர்-ரஹீம்“ என்ற சொல் குறிப்பது.

(1) அல்லாஹ் வல்லமை மிக்கவன்
(2) அல்லாஹ் இரக்கம் கொண்டவன்
(3) அல்லாஹ்வினது இருப்பை
(4) அல்லாஹ்வினது அருளை
(5) அல்லாஹ் கேட்பவன்

(……..)

06. பின்வரும் விடயங்களில் மறுமை நிகழ்வுடன் தொடர்புடைய அம்சம்

(1) தௌபா (2) தாத் - ஸிபத் (3) இல்ஹாத் (4) கழா கத்ர் (5) ஷபாஅத்

(……..)

07. ஒருவர் தன்னுடைய காரியத்தை மேற்கொள்வதற்காக தனது சார்பில் மற்றொருவரை நியமித்தல் எவ்வாறு அழைக்கப்படும்.

(1) அத்-த.ஃமீன் (2) அல்-வகாலா (3) அஸ்-ஸம்ஸரா (4) அல்-இஜாரா (5) மஹ்ஜுப்

(……..)

08. இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகளில் விவசாயப் பங்குடமையைக் குறிப்பது யாது?

(1) முஷாரகா (2) முஸாரஆ (3) முழாரபா (4) முராபஹா (5) பைஉல் முஅஜ்ஜல்

(……..)

09. ரப்பானிய்யா, ஷுமூலிய்யா, வஸதிய்யா ஆகிய பதங்கள் தரும் பொருத்தமான தொகுதி.

(1) பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது, சர்வதேச மயமானது.

(2) சர்வதேச மயமானது, பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது.

(3) தெய்வீகத் தன்மை வாய்ந்தது, பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது.

(4) தெய்வீகத் தன்மை வாய்ந்தது, மத்திமமானது, பூரணத்துவம் மிக்கது.

(5) பூரணத்துவம் மிக்கது, தெய்வீகத் தன்மை வாய்ந்தது, மத்திமமானது.

(……..)

10. தாவூத் (அலை), ஸகரிய்யா (அலை) ஆகியோர் மேற்கொண்ட தொழில் முயற்சிகள் முறையே யாவை?

(1) இரும்புருக்கு, விவசாயம்

(2) கப்பல் கட்டுதல், விவசாயம்

(3) இரும்புருக்கு, தச்சுத் தொழில்

(4) வணிக முயற்சி, தச்சுத் தொழில்

(5) விவசாயம், மந்தை வளர்ப்பு

(……..)

11. செல்வத்தைத் தேவைக்கேற்ப செலவிடுவது, பகிர்ந்தளிப்பது தொடர்பாக உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்களின் கூற்று:

(1) நீங்கள் ஓர் ஏழைக்கு வழங்கினால் பிறரிடம் தேவைப்படாத அளவுக்கு வழங்குங்கள்.

(2) என்னால் நிறைவேற்ற முடியாமல் போன கடமைகளை நிறைவேற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் செல்வந்தரிடம் பெற்று ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பேன்.

(3) ஏழைகளைப் பராமரிக்கப் போதுமான அல்லாஹ் செல்வத்தை பணக்காரரிடம் வைத்திருக்கிறான்.

(4) ஏழைகள், அநாதைகள், கடன்பட்டோர், திருமணம் செய்யக் கருதும் வசதியற்றோர் என்னிடம் உதவி பெற்றுக்கொள்ளலாம்.

(5) அவர்களின் செல்வங்களில் யாசிப்போருக்கும் இல்லாதோருக்கும் உரிமையுண்டு.

(……..)

12. ஹதீஸ்கள் மதன், இஸ்னாத் என்ற இரு அம்சங்களை உள்ளன. அவற்றுள் இஸ்னாத் என்ற பதம் குறிப்பது,

(1) ஹதீஸின் உள்ளடக்கம் (2) ஹதீஸ் அறிவிப்பாளர் (3) ஹதீஸ் ஆதாரம்

(4) ஹதீஸ் அறிவிப்பாளர் பெயர் வரிசை (5) ஹதீஸின் தொடக்கம்

(……..)

13. “மனிதன், மனிதனுக்கு வழிபடுவதிலிருந்து விடுவித்து, அல்லாஹ்வுக்கு மாத்திரம் வழிபடும் நிலைக்குக் கொண்டுவருவதற்காகவே அல்லாஹ் எங்களை அனுப்பி வைத்தான்” என்று பாரசீகத் தளபதி ருஸ்துமிடம் கூறியவர் யார்?

(1) உமர் இப்னு கத்தாப் (ரழி)

(2) காலித் இப்னு வலீத் (ரழி)

(3) அம்ர் இப்னு ஆஸ் (ரழி)

(4) ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரழி)

(5) ருப்ஆ இப்னு ஆமிர் (ரழி)

(……..)

14. பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) தாயின் சகோதரியின் மகள் திருமணம் முடிப்பதற்கு தடைசெய்யப்பட்டவர்களில் ஆகுவாள்.

(2) நபி தாவூத் (அலை) அவர்கள் அளவை நிறுவைகளில் மோசடி செய்துகொண்டிருந்த அய்கா எனும் சமூகத்திற்கு நபியாக அனுப்பப்பட்டார்கள்.

(3) பைத்துல்மால் என்ற பெயர் நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலிருந்தே இஸ்லாமிய வழக்கத்தில் இடம்பெறுகிறது.

(4) தாத்தாரியரின் படையெடுப்பு கி.பி. 1528ஆம் ஆண்டு இடம்பெற்றது.

(5) காதி முஹம்மத் என்பவர் நக்ஷபந்தியா தரீக்காவின் ஸ்தாபக தலைவர் ஆவார்.

(……..)

15. ஹராம் - ஹலால் பற்றிய சரியான விடைகளின் தொகுதி,

- A - அடிப்படையில் அனைத்தும் ஆகுமாக்கப்பட்டதே.
- B - மனிதன் நல்லெண்ணத்துக்காக ஹராமான ஒன்றை ஹலாலாக கருதலாம்.
- C - ஹராத்துக்கு வழிவகுப்பவை அனைத்தும் ஹராமே.
- D - நல்லெண்ணம் ஹராத்தை நியாயப்படுத்தாது.
- E - ஹராம் அனைவருக்கும் ஹராமே.

(1) ABCD (2) ACDE (3) EBCD (4) ADEB (5) BCAD

(……..)

16. பின்வருவனவற்றுள் இஸ்லாமியப் பொருளாதாரக் கோட்பாட்டைச் சாராத அம்சத்தை அடையாளப்படுத்துக.

(1) வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியன.

(2) தனியார் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு.

(3) செலவு செய்வதில், சேமிப்பதில் நடுநிலை பேணல்.

(4) செல்வம் மனிதனை சோதிப்பதற்காகத் தரப்பட்டதாகும்.

(5) செல்வம் மனித முயற்சியினாலேயே பெறப்படுவதாகும்.

(……..)

17. தற்காலிக மஹ்ரமிகளைக் கொண்ட தொகுதி

(1) முஷ்ரிக்கான பெண், மனைவியின் சகோதரி, விபச்சாரி, மாற்றான் மனைவி

(2) மனைவியின் சகோதரி, மனைவியின் தாயின் சகோதரி, மாற்றான் மனைவி, பால் கொடுத்த பெண்ணின் பிள்ளை

(3) மகளின் மகனின் மனைவி, மனைவியின் சகோதரி, கணவனின் சகோதரன், முஷ்ரிக்

(4) விபச்சாரி, மனைவியின் சகோதரி, மாற்றான் மனைவி, பால் கொடுத்த பெண்ணின் சகோதரி

(5) கணவனின் சகோதரன், தந்தையின் சகோதரன், மாற்றாள் கணவன்

(……..)

18. பின்வருவனவற்றுள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினருக்கு மிகவும் நெருக்கமான ஷீஆப் பிரிவினர்,

(1) இஸ்மாஈலிய்யா (2) நுஸைரிகள் (3) பாத்தினிகள்

(4) ஸைதிக்கள் (5) இஸ்னாஅஷரிய்யா

(……..)

19. இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தில் “ஹஜ்புன் நுக்ஸான்” என்பது,

(1) குறிப்பிட்ட ஒருவர் இருப்பதனால் வேறு சிலருக்குச் சொத்தின் பங்கு முற்றாகவே கிடைக்காமை.

(2) குறிப்பிட்ட ஒருவர் இருப்பதனால் சிலருக்குச் சொத்தில் பங்கு குறைவாகக் கிடைக்கின்றமை.

(3) மரணித்தவரின் வாரிசு வயதில் குறைந்த நிலையில் உள்ளமை.

(4) வாரிசுகளின் மீது பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளமை.

(5) சொத்துக்குரியவரை வாரிசு கொலை செய்த நிலைமை.

(……..)

20. மதீனாவிலிருந்தும் அதற்கு வடக்கே இருந்தும் வருபவர்களுக்கான இஹ்ராம் கட்ட வேண்டிய ”மீகாத்”:

(1) அல் ஜுஹ்பா (2) யலம்லம் (3) கர்னுல் மனாஸில்

(4) துல் ஹுலைபா (5) தாத்துல் இராக்

(……..)

21. கீழ்வரும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு மகாஸிதுடன் தொடர்பான சொற்பிரயோகங்களை தெரிவுசெய்க.

- A. இல்லத் E. பர்ஊ I. நதாஇஜ்
- B. மஸாலிஹ் F. அஸ்ல் J. கரீப்
- C. அஸ்ரார் G. முஃதல் K. ஹுக்ம்
- D. மர்பூ H. இலல் L. மக்தூ

(1) BFGL (2) BCEK (3) BDJK (4) BCGI (5) BCHI

(……..)

22. நேர்மையற்ற கொடுக்கல் வாங்கல் முறைகளை மோசடி எனப்படுகிறது. இதில் உள்ளடங்கும் அம்சங்களின் சேர்மானம் பின்வருவனவற்றுள்.

A - அளவை நிறுவை மோசடி
B - கலப்படம்
C - குறை கூறி விற்றல்
D - ஏமாற்றுதல்
E - பொய் சத்தியம் செய்தல்

(1) BCDE (2) ABDE (3) ACDE (4) BDCE (5) AEBC

(……..)

23. பின்வருவனவற்றில் ஸகாத்தின் பர்ளுகளில் அடங்கும் விதி யாது?

(1) பொருள் நிஸாபை அடைந்திருத்தல் (2) தகுதியானவர்களுக்கு வழங்குதல்

(3) வருடம் பூர்த்தியாகியிருத்தல் (4) பொருள் வழங்குபவருக்கு உரிமையாய் இருத்தல்

(5) வருடம் பூர்த்தியாகியிருத்தல்

(……..)

24. முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றனர்?

(1) திம்மீக்கள் (2) ஹர்பியர் (3) மவாலிக்கள் (4) அஜமிகள் (5) அஜ்னபிகள்

(……..)

25. கலீபா உஸ்மான் (ரழி) மற்றும் அலி (ரழி) அவர்களின் காலத்தில் அமைதியின்மை நிலவக் காரணமாக அமைந்தவர் யார்?

(1) அப்துல்லா பின் உபை (2) அப்துல்லா பின் ஸபா (3) அபூ லுஃலுஉ பைரூஸ்

(4) உபை இப்னு ஸ ுலூல் (5) அமர் இப்னு லுஹை

(……..)

26 இலிருந்து 29 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் X நிரலிலுள்ளவற்றுடன் Y நிரலில் உள்ளவை ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

26.

| X (நிரல்) | Y (நிரல்) |
|---|---|
| 1. இல்ஹாத் | A. நயவஞ்சகம் |
| 2. ஷிர்க் | B. நாத்திகம் |
| 3. நிபாக் | C. மதம் மாறுதல் |
| 4. குப்ர் | D. நிராகரிப்பு |
| 5. றித்தத் | E. பங்கு கொடுத்தல் |

(1) BAECD (2) BEADC (3) BEADC (4) EABCD (5) EACBD

(……..)

27.

| X (நிரல்) | Y (நிரல்) |
|---|---|
| 1. நிகாஹ் நிறைவேறாமை | A. லிஆன் |
| 2. மூன்று தலாக் சொல்லப்பட்ட நிலை | B. லிஹார் |
| 3. மூன்று தலாக்கையும் ஒரே தடவையில் கூறல் | C. பாகின் அல் குப்ரா |
| 4. விபச்சாரக் குற்றம் சுமத்தல் | D. தலாக் பிதா |
| 5. தாய்க்கு ஒப்பிடுதல் | E. பஸ்க் |

(1) ABCDE (2) ECDAB (3) EDCAB (4) DEBCA (5) CDEBA

(……..)

28.

| X (நிரல்) | Y (நிரல்) |
|---|---|
| 1. முஸ்னத் | A. இமாம் மாலிக் (ரஹ்) |
| 2. அர்-ரிஸாலா | B. புஹாரி (ரஹ்) |
| 3. அத்-தாரிகுல் கபீர் | C. இமாம் அபூ ஹனீபா |
| 4. முவத்தா | D. இமாம் அபூ யூசுப் |
| 5. கிதாபுஸ் ஸலாத் | E. ஷாபிஈ இமாம் |

(1) CEBAD (2) DEADB (3) DBEAD (4) ABDEC (5) DEBEA

(……..)

29. X (நிரல்) Y (நிரல்)

| X (நிரல்) | Y (நிரல்) |
|---|---|
| 1. அபூ பக்ர் அல்-அப்ஹரி | A. ம.்.ஹதுஷ் ஷரா |
| 2. அபூ மன்ஸூர் அல்-மாதுரூதி | B. அல்-புர்ஹான் |
| 3. முஹம்மத் இப்னு அலி | C. அல்-இலல் |
| 4. இப்னு அப்துல்லாஹ் அல்-ஜுவைனி | D. மகாஸிதுஸ் ஸவ்ம் |
| 5. இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ் ஸலாம் | E. அஸ்ஸலாத் வ மகாஸிதுஹா |

(1) CDABE (2) CAEBD (3) EDABC (4) EDBAC (5) EDACB

(……..)

30. பாவமன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகளுள் அடங்காத அம்சம்.

(1) தூய எண்ணத்துடன் (இக்லாஸுடன்) பாவமன்னிப்புக் கோரல்

(2) குறிப்பிட்ட பாவச்செயல்களில் ஈடுபடுவதை முற்றுமுழுதாக விட்டுவிடல்.

(3) தான் செய்த பாவத்தை நினைத்து மனம் வருந்துதல்

(4) குளித்து சுத்தமான நிலையில், இருகரம் ஏந்தி பாவமன்னிப்புக் கோரல்.

(5) மனிதனோடு தொடர்புற்ற ஒரு குற்றச்செயலாயின் அவர்களிடம் மன்னிப்புக் கோரல்.

(……..)

31. “தாருன் நத்வா” என்ற சபையை உருவாக்கியவர் யார்?

(1) அப்துல் முத்தலிப் (2) குஸை இப்னு கிலாப் (3) அப்துஷ் ஷம்ஸ்

(4) அபூ சுப்யான் பின் ஹர்ப் (5) ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப்

(……..)

32. பெற்றோர் மரணித்த பின்னர் அவர்களுக்கு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளுள் பிரதானமானது:

(1) அவரது கப்ரை ஸியாரத் செய்தல். (2) அவர் பெயரில் அன்னதானம் வழங்குதல்.

(3) அவரை அடிக்கடி நினைவு கூர்ந்து புகழ்தல். (4) அவரின் வஸிய்யத்களை நிறைவேற்றல்.

(5) அவரது சொத்துக்களை முறையாகப் பகிர்ந்து கொள்ளல்.

(……..)

33. ஹஜ்ஜின் வாஜிப்களில் ஒன்று விடுபட்டதற்காக பித்யாவாக ஓர் ஆட்டைக் குர்பான் கொடுக்க முடியாத ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

(1) ஹரமிலுள்ள மூன்று மிஸ்கீன்களுக்கு உணவளிக்க வேண்டும்.

(2) மக்காவில் மூன்று நோன்புகள் பிடிக்க வேண்டும்.

(3) மதீனாவில் 07 நோன்புகள் பிடிக்க வேண்டும்.

(4) மக்காவில் 02 நோன்புகளும் மதீனாவில் 07 நோன்புகளும் பிடிக்க வேண்டும்.

(5) மக்காவில் 03 நோன்புகளும் ஊர் திரும்பியதும் 07 நோன்புகளும் பிடிக்க வேண்டும்.

(……..)

34. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.

A. தஸவ்வுப் என்பது துறவறக் கோட்பாடாகும்.

B. மங்கோலியர் இஸ்லாத்தைத் தழுவ சூபிமகான்கள் காரணமாக அமைந்தனர்.

C. தஸவ்வுப் என்ற வழிமுறை நபியவர்கள் காலத்தில் இருந்தே காணப்பட்டது.

D. இஸ்லாமிய உலகில் ஷாதுலியா, சஹ்சவர்தியா, நக்ஷபந்திய்யா போன்ற தரீக்காக்கள் தஸவ்வுப் சிந்தனையை முன்வைத்தன.

E. முஸ்லிம் உம்மத்தை மேற்கத்தேய சிந்தனைகளில் இருந்து பாதுகாக்க தரீக்காக்கள் பங்காற்றியுள்ளன.

மேலுள்ளவற்றுள் தஸவ்வுப் தொடர்பான கூற்றுக்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி:

(1) A, B, C (2) B, D, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

(……..)

35. இஜ்திஹாதின் அடிப்படையில் தோற்றம் பெற்ற சட்ட மூலாதாரங்கள் யாவை?

(1) அல்ஹதீஸ், அல்இஜ்மாஉ (2) அல் ஹதீஸ், அல் கியாஸ் (3) அல் இஜ்மாஉ, உர்பு

(4) அல்இஸ்திஹ்ஸான், ஷராயிஉஸ் ஸாபிகா (5) மேலுள்ள அனைத்தும்

(……..)

36. “அல்லாஹ் பாவமன்னிப்புக் கோருபவர்களையும் தூய்மையானவர்களையும் நேசிக்கின்றான்” எனும் கூற்று,

(1) அல்-குர்ஆனின் கூற்று (2) நபி ஸல் அவர்களின் கூற்று (3) அறிஞர்களின் கூற்று

(4) ஸஹாபாக்களின் கூற்று (5) கலீபாக்களின் கூற்று

(……..)

37. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சிந்தனா ரீதியான பிரிவுகளால் ஏற்பட்ட பாதிப்புக்களில் உள்ளடங்காதது

(1) முஸ்லிம் சமூகத்தின் ஒருமைப்பாடு குலைந்தமை

(2) முஸ்லிம்கள் தமக்குள்ளேயே மோதிக்கொண்டமை

(3) அகீதாக் கோட்பாடுகள் சர்ச்சைகள் மிகுந்த ஒரு துறையாக நோக்கப்பட்டமை

(4) ஏகத்துவத்துக்கு இயைபான பல கொள்கைகள் தோற்றம் பெற்றமை

(5) கிலாபத் எனும் முஸ்லிம் தலைமைத்துவம் வலுவிழுந்து போனமை

(……..)

38. பின்வருவனவற்றுள் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் பற்றிய பொருத்தமற்ற கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பாரசீகக் குடும்பமொன்றை சேர்ந்தவர்களான இவர்கள் கூபா நகரில் ஹிஜ்ரி 80 இல் பிறந்தார்கள்.

(2) அஹ்லுர் ர.்.யி எனும் சிந்தனை மரபுக்கு முதலிடம் கொடுத்தமை

(3) இமாம் அவர்கள் ரிஸாலா பில் பத்வா, கிதாபுஸ் ஸியார், கிதாபுல் மனாஸிக் போன்ற நூல்களை வெளியிட்டார்.

(4) நு.்.மான் இப்னு தாபித் என்பது இவரின் இயற்பெயராகும்.

(5) இமாம் அவர்கள், ஹம்மாத் அவர்களிடமும் இன்னும் பல பிக்ஹ் ஆசான்களிடமும் கற்றுள்ளார்.

(……..)

39. சட்டத் தீர்வுகளையும் விதிகளையும் பெறுவதில் குறித்த ஓர் இமாமின் விதிமுறையைப் பின்பற்றுபவர்:

(1) முஜ்தஹித் பில் பத்வா (2) முஜ்தஹித் பில் மத்ஹப் (3) முஜ்தஹித் முன்தஸிப்

(4) முஜ்தஹித் முத்லக் (5) முஜ்தஹித் பில் மஸாகில்

(……..)

40. ஆஹாதான வகையைச் சார்ந்த ஹதீஸ்களும், இஸ்னாதில் ஏற்படும் முறிவுகளின் அடிப்படையில் அமைந்த இரு வகை ஹதீஸ்கள் யாவை?

(1) முர்ஸல், மர்பூ.ஃ. (2) மஷ்ஹூர், மக்தூ.ஃ. (3) முஅல்லக், மவ்கூப்

(4) முன்கதி.ஃ, முஅல்லக் (5) அல்மஷ்ஹூர், அல்அஸீஸ்

(……..)

41. இஜ்மாஉ ஸுகூதி பற்றிய சரியான கூற்று:

(1) முஜ்தஹித்கள் அனைவரும் ஏகோபித்து கருத்தொற்றுமைப் பட்டிருத்தல்.

(2) முஜ்தஹித்கள் அனைவரும் தங்களது கருத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருத்தல்.

(3) முஜ்தஹித்கள் சிலர் கருத்துத் தெரிவிக்க மற்றும் சிலர் அக்கருத்தை ஏற்று மௌனம் சாதித்தல்.

(4) குறித்த விடயத்தில் முஜ்தஹித்கள் ஒரு கருத்தை முன்வைக்க மற்றும் சிலர் அது தொடர்பாக வேறொரு நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல்.

(5) 3உம், 4ம் சரியானவை.

(……..)

42. குடும்ப வாழ்க்கை தொடர்பான போதனைகளில் பெற்றோர் விடயத்தில் பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய பணிகளை அல்குர்ஆன் எவ்வாறு அழைக்கின்றது.

(1) பிர்ருல் வாலிதைன் (2) ஹுகூகுல் இபாத் (3) பர்ளு கிபாயா

(4) கர்ளுல் ஹஸன் (5) அமலுஸ் ஸாலிஹாத்

(……..)

43. ஒரு வருடம் முழுவதும் 400 ஆடுகளை வைத்திருக்கும் ஒருவர் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு

(1) இரு ஆடுகள் (2) மூன்று ஆடுகள் (3) நான்கு ஆடுகள்

(4) ஐந்து ஆடுகள் (5) ஒரு மாடு

(……..)

44. நிபாக், குப்ர் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் நிபாக்கை உள்ளடக்கிய சேர்மானத் தொகுதியை தெரிவு செய்க.

A. அல்லாஹ்வை ஏற்க மறுத்தல்

B. உள்ளொன்று புறமொன்றாக நடந்துகொள்ளல்

C. நரகின் கீழ்தட்டில் நிரந்தரமாக தங்கியிருத்தல்

D. இஸ்லாத்தின் கடமைகளை மறுத்தல்

E. பொய், மோசடி, வாக்குமாறுதல் எனும் பண்புகள்

F. இறை சட்டங்களை மறுத்தல்

(1) BEF (2) BCE (3) ABC (4) ADF (5) BEF

(……..)

45. பிக்ஹ் கலை பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியானது யாது?

(1) இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் தனது சட்டத்துறையில் கௌல் ஜதீத், கௌல் கதீம் ஆகிய பதங்களைப் பிரயோகித்துள்ளார்.

(2) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களும் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களும் சட்டவாக்கத்தில் ஒரே அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

(3) இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் தனது சட்டவாக்கத்தில் அறிவுக்கும் ஆய்விற்கும் முக்கியமளித்துள்ளார்.

(4) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்) ''மஜல்லதுல் அஹ்காம் அல் அத்லிய்யா'' எனும் சட்ட நூலை உருவாக்கினார்.

(5) ஷாபி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டே பிக்ஹுல் அக்பர் எனும் சட்ட நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

(……..)

46 இலிருந்து 50 வரையான வினாக்களுக்கு இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்கு மிகப் பொருத்தமான விடையை (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவு செய்க.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | முதலாம் கூற்று சரியானது | இரண்டாம் கூற்று சரியானதும் முதலாம் கூற்றை விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 46. | தீன், உயிர், புத்தி, பரம்பரை, மானம், செல்வம் என்பனவற்றைப் பாதுகாப்பது "ழரூரிய்யாத்" இல் அடங்கும். | மனித குலத்தின் வாழ்வு, எதில் தங்கியுள்ளதோ அவ்வாறான நலன்களே ழரூரிய்யாத் என அழைக்கப்படுகின்றது. |
| 47. | இஸ்னா அஷரிய்யா என்றால் பன்னிருவரைச் சார்ந்தோர் எனப் பொருள்படும். | ஹுதைலிய்யா என்பது காரிஜிகளின் உட்பிரிவுகளில் ஒன்றாகும். |
| 48. | 85 கிராம் தங்கம் வைத்திருப்பவர் வருட முடிவில் 2.5 வீதம் ஸகாத்தாக வழங்க வேண்டும். | 595 கிராம் வெள்ளி வைத்திருப்பவர் வருட முடிவில் 2.5 வீதம் ஸகாத்தாக வழங்க வேண்டும். |
| 49. | "பைத்துல்மால்'' என்ற பெயர் நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலிருந்தே இஸ்லாமிய வழக்கத்தில் இடம்பெற்றது. | பைத்துல்மால் என்பது இஸ்லாமிய நாட்டில் காணப்படும் அரச திறைசேரியாகும். |
| 50. | நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துக்கு முன் கதீஜா (ரழி) அவர்களிடமிருந்து முழாரபா அடிப்படையிலேயே வியாபாரப் பொருட்களை ஷாம் நாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். | ஜாஹிலியாக் காலத்தில் பிரபல்யமாக இருந்த "முழாரபா'' வியாபார முறையினை இஸ்லாத்தின் வருகைக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தார்கள். |